தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24357580.*

**வழக்கு எண். 7642 / விசாரணை / 2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள் 23.09.09.</u>**

| | |
|---|---|
| முன்னிலை : | திரு.தி.சீனிவாசன். எம்.எஸ்சி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர் : | திரு. கண. முனியசாமி,<br>பொதுச் செயலாளர்,<br>மதுரை நுகர்வோர் பாதுகாப்பு மையம்,<br>48/6, மேற்கு பொன்னகரம் 4–வது தெரு,<br>மதுரை – 625 016. |
| பொது அதிகார அமைப்பு : | பொதுத் தகவல் அலுவலர்,<br>சென்னை மாநகராட்சி,<br>ரிப்பன் கட்டிடம்,<br>சென்னை– 600 003. |

------

மனுதாரர் திரு. கண. முனியசாமி விசாரணைக்கு வரவில்லை. திருமதி. / செல்வி எஸ். அமிர்தா ஜோதி, மாவட்ட வருவாய் அலுவலர், நிலம் மற்றும் உடைமைத்துறை, சென்னை மாநகராட்சி இவ்வாணையத்தில் இன்று (23.09.09) நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 11.08.08 அன்று நகராட்சி நிர்வாக ஆணையரிடம் 10 மாநகராட்சிகள் குறித்த தகவல்கள் கேட்டு மனு செய்துள்ளார். மனுதாரரின் மனு சம்பந்தப்பட்ட

மாநகராட்சிக்கு தகவல் தர **05.09.08** அன்று அனுப்பப்பட்டுள்ளது. மனுதாரருக்கு சம்பந்தப்பட்ட மாநகராட்சியிலிருந்து தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளன. மனுதாரர் சென்னை மாநகராட்சியிலிருந்து முழுத் தகவலும் கிடைக்கவில்லை என்று **26.12.08** மற்றும் **28.03.09** ஆகிய தேதிகளில் மேல்முறையீடு செய்த மனு இன்று ( **23.09.09**) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையில் பொதுத் தகவல் அலுவலர் **13.10.08, 17.06.09** மற்றும் **14.07.09** ஆகிய தேதிகளில் தகவல்கள் அனுப்பப்பட்டதாக தெரிவித்தார். மனுதாரர் **29.08.09** மற்றும் **15.09.09** ஆகிய தேதிகளில் இவ்வாணையத்திற்கு அனுப்பிய கடிதத்தில் முழுத் தகவல்களும் சென்னை மாநகராட்சியிலிருந்து பெற்றுக் கொண்டதாக தெரிவித்துள்ளார். மனுதாரருக்கு முழுத் தகவலும் வழங்கப்பட்டதாக முடிவு செய்யப்பட்டு இவ்வழக்கு இத்துடன் முடிவு செய்யப்படுகிறது.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 29.09.09**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

**( சு. மோகன தாஸ் )**
**உதவி பதிவாளர்**

**வழக்கு எண். 7642/09**

**பெறுநர்**
**பொதுத் தகவல் அலுவலர்,**
**சென்னை மாநகராட்சி,**
**ரிப்பன் கட்டிடம்,**
**சென்னை– 600 003.**

**திரு. கண. முனியசாமி,**
**பொதுச் செயலாளர்,**
**மதுரை நுகர்வோர் பாதுகாப்பு மையம்,**
**48/6, மேற்கு பொன்னகரம் 4–வது தெரு,**
**மதுரை – 625 016.**